بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ

**ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் *05/11/2021* அன்று *U.K* - இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்**

# தஹ்ரீக்கே ஜதீத் சந்தாவின் 87 ஆம் ஆண்டில் ஜமாஅத்தினர்கள் சார்பாக செய்யப்பட்ட பொருள் தியாகங்கள் பற்றிய நற்குறிப்பும் 88 ஆவது ஆண்டு துவக்கம் குறித்த அறிவிப்பும்

أَشْهَدُ أَنْ لَّآ إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ۔ أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ۔

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ۝ اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ ۝ اَلرَّحْمٰنِ الرَّحِيْمِ ۝ مٰلِكِ يَوْمِ الدِّيْنِ ۝ إِيَّاكَ نَعْبُدُ وَإِيَّاكَ نَسْتَعِيْنُ ۝

اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ ۝ صِرَاطَ الَّذِيْنَ أَنْعَمْتَ عَلَيْهِمْ ۙ غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ ۝

அல்லாஹ் நம்பிக்கை கொண்டோரின் சிறப்பம்சங்களாக எடுத்துரைத்தவற்றில் ஒரு சிறப்பு என்னவென்றால், அவர்கள் தம் தூய செல்வத்திலிருந்து அல்லாஹ்வின் திருப்திக்காக அல்லாஹ்வின் வழியில் செலவழிப்பார்கள். திருக்குர்ஆனில் அல்லாஹ் நம்பிக்கை கொண்டவர் குறித்து கூறும்போது, நம்பிக்கை கொண்டவர் எவர் என்றால் அவர் அல்லாஹ்வின் வழியில் செல்வத்தை செலவழிப்பார் என்று கூறியுள்ளான். அதேபோன்று ஸக்காத்தைக் குறித்தும் சதகாவைக் குறித்தும் கூறும்போது, பொருள் தியாகம் பற்றி கூறியுள்ளான்; அவ்வாறே அந்த செல்வத்தை செலவு செய்தல் குறித்தும் விரிவாக எடுத்துரைத்துள்ளான்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்கள் கொண்டுவந்த மிஷன் என்னவென்றால், அல்லாஹ்வின் ஏகத்துத்தை நிலை பெறச் செய்வதும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மற்றும் இஸ்லாத்தின் கொடியை உலகில் பறக்கச் செய்வதும் ஆகும். இந்த விரிவான வேலையை நிறைவேற்றுவதற்கு ஜமாஅத்தினர்கள் உலகம் முழுவதிலும் பொருள் தியாகத்தின் உதாரணங்களை நிலை நாட்டுகிறார்கள்.

இந்த முன்னுதாரணங்களைக் காணும் போது - இறுதி காலத்தில் இஸ்லாத்தின் அழகிய போதனை எவர் மூலமாக உலகில் பரவ இருந்ததோ, அல்லாஹ்வின் புறமிருந்து நியமிக்கப்பட்ட அந்த நபர் நிச்சயமாக ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்களே ஆவார்கள் என்ற நம்பிக்கையில் மனிதன் இன்னும் அதிக உறுதி பெற்று விடுகின்றான். அஹ்மதிய்யத்தின் எதிரிகள் உள்ளங்களிலிருந்து பகைமையை வெளியேற்றி இந்த ஓர் அடையாளத்தை மட்டுமே சிந்தித்துப் பார்த்தால் கூட அஹ்மதியத்தின் உண்மைக்குச் சான்றான இந்த ஓர் அடையாளம் அவர்களின் உள்ளங்களைத் தூய்மையாக்க போதுமானதாகும். ஆனால் இந்த பெயர் தாங்கிய ஆலிம்களின் உள்ளங்கள் கற்களை விடவும் அதிகம் கடுமையாக இருக்கின்றன.

அஹ்மதிய்யா ஜமாஅத் கோடீஸ்வரர்களைக் கொண்ட ஜமாஅத் ஒன்றும் கிடையாது. இந்த ஜமாஅத்தில் உள்ள அனேக மக்கள் ஏழைகளாகவும் நடுத்தர

வர்க்கத்தை சார்ந்தவர்களாகவும் இருக்கின்றனர். ஆனால் அவ்வாறிருந்தும் தியாகம் செய்ய வேண்டும் என்ற ஓர் ஆர்வம் காணப்படுகிறது. ஜமாஅத் தன்னுடைய வரையறைக்குட்பட்ட வசதிகளுடன் எந்தப் பணியை ஆரம்பித்தாலும் அதில் அல்லாஹ் பரக்கத்தை வழங்கி விடுகிறான். ஜமாஅத் வளரும்போது பல்வேறு விதமான சிந்தனைகளைக் கொண்ட மக்களும், குறைவான தர்பிய்யத்தையுடையவர்களும் அல்லது பழைய அஹ்மதிகளிலும் (தர்பிய்யத் குறைவின் காரணமாக), நாம் ஏன், எதற்காக சந்தா கொடுக்க வேண்டும்? என்று இவ்வாறான கேள்விகளைக் கேட்கக் கூடிய மக்கள் ஜமாஅத்தில் தென்படுகிறார்கள். இவ்வாறான மக்கள் வீடுகளில் குழந்தைகளுக்கு முன்பும் இவ்வகையான பேச்சுகளைப் பேசுகின்றனர். அதன் காரணமாக குழந்தைகளின் சிந்தனைகளிலும் இவ்வாறான கேள்விகள் எழ ஆரம்பித்து விடுகின்றன.

ஆக, **தமது நடவடிக்கைகள் மற்றும் செயல்களின் மூலமாக மக்களுடைய சந்தேகங்களை நீக்க வேண்டியது பொறுப்பாளர்களின் பணியாகும். மக்கள் செய்கின்ற தியாகங்கள் எங்கு செலவழிக்கப்படுகிறது என்பதைக் குறித்து மக்களுக்கு நம்பிக்கையூட்டுங்கள். அல்லாஹ்வின் பார்வையில் இந்த பொருள் தியாகத்திற்கு எந்த அளவு முக்கியத்துவத்துவம் உள்ளது என்பதையும், இந்தத் தியாகத்திற்குப் பகரமாக அவர்களுக்கு அல்லாஹ்வின் திருப்தி கிடைக்கும் என்பதையும் மக்களுக்குப் புரிய வையுங்கள்.**

இந்தத் தியாகங்கள் இஸ்லாத்தைப் பரப்புவதற்காக செலவாகின்றன; நம்முடைய டி.வி சேனல் உள்ளது; முபல்லிக்களின் கல்விக்காகவும் அவர்களின் மூலமாக நடைபெறும் தப்லீகிற்காகவும் செலவாகின்றன; பள்ளிவாசல்கள் கட்டப்படுகின்றன; நூல்கள் வெளியிடப்படுகின்றன; ஏழை குழந்தைகளின் கல்விக்காகவும் பசித்தவர்களுக்கு உணவு அளிப்பதற்காகவும் இந்த பொருள் தியாகங்கள் செலவாகின்றன.

மக்களிடத்தில் மிக அதிகமாக கேள்விகள் எழ ஆரம்பித்துவிட்டன என்பதற்காக நான் இவ்விஷயங்களை கூறவில்லை - அல்லாஹ் பாதுகாப்பானாக! மாறாக நான் எதற்காக கூறினேன் என்றால், ஜமாஅத் பரவும்போது, எண்ணிக்கை அதிகரிப்பதன் காரணமாக தீமையைப் பரப்பக் கூடியவர்களும், ஷைத்தானிய எண்ணங்களை உருவாக்கக் கூடியவர்களும் வந்துவிடுகிறார்கள். அவர்கள் குழப்பத்தை ஏற்படுத்தவும் குறைவான தர்பிய்யத் கொண்ட மக்களுடைய சிந்தனைகளில் சந்தேகத்தை உருவாக்கவும் முயற்சி செய்கின்றனர். ஜமாஅத் மக்கள் எந்த அளவு உறுதியான சிந்தனைகளைக் கொண்டுள்ளார்கள் என்றால், ஜமாஅத் அமைப்பை நடத்துவதற்கு செலவீனங்கள் அவசியமாகும் என்பதையும், இறை வழியில் செலவழிக்க வேண்டும் என்பது அல்லாஹ்வுடைய கட்டளையே ஆகும் என்பதையும் அவர்கள் புரிந்து வைத்துள்ளனர். இதற்காக அல்லாஹ்வுக்கு நன்றி!

அல்லாஹ் இந்தத் தியாகங்களை வீணாக்குவதில்லை. தியாகம் செய்யும் மக்களுக்கு அவன் எங்கிருந்து ரிஸ்க்கை வழங்குவான் என்றால்; வழங்குகிறான் என்றால், அங்கிருந்து ரிஸ்க் வரும் என அவர்கள் எண்ணிக்கூட பார்த்திருக்க மாட்டார்கள். இது அல்லாஹ்வின் வாக்குறுதி ஆகும். அல்லாஹ் தனது வாக்குறுதியை நிறைவேற்றுகிறான். தம்மிடம் ஒன்றும் இல்லாத போதும் அல்லாஹ்வின் திருப்திக்காக செலவழித்தபோது ஏதேனும் வழிவகையின் மூலமாக அல்லாஹ் ஏற்பாடு செய்த எண்ணற்ற முன்னுதாரணங்கள் ஜமாஅத்

உறுப்பினர்களிடத்தில் காணக் கிடைக்கின்றன. இது ஒன்றும் பழங்காலத்து சம்பவங்கள் கிடையாது. மாறாக இது எவ்வாறான அனுபவங்கள் என்றால் இதைக் குறித்து மக்கள் இன்றும் எழுதுகின்றனர். இன்றும் அல்லாஹ் நம்பிக்கை கொண்டோரின் ஈமானை உறுதிப்படுத்துகின்றான்.

தியாகம் செய்யக் கூடியவர்கள் மீது அருள் புரிவது மட்டுமின்றி தியாகம் செய்யக் கூடியவர்களுக்கு அருகில் இருக்கக் கூடியவர்களின் ஈமானும் இந்த சம்பவங்கள் மூலம் உறுதி பெறுகின்றன. இன்று நான் இவ்வாறான சில உதாரணங்களை எடுத்துரைப்பேன்.

*இதன் பிறகு ஹுஸூர் அவர்கள் கினி கொனாக்ரி (Guinea Conakry), கனடா, சவுத் ஆஃப்ரிக்கா, ஆஸ்திரேலியா, கஸக்கஸ்தான், யூ.கே, இந்தியா, புர்கினோஃபாஸோ, சியேராலியோன், காபோன், ஜோர்டான், பெலீஸ், சஞ்ச்பார், மொரோக்கோ, அர்ஜன்டைன், லைபீரியா, மாலி, பெனின் போன்ற நாடுகளைச் சார்ந்த ஆண்கள், பெண்கள், முதியோர்கள், குழந்தைகள், பணக்காரர்கள், ஏழைகள் ஆகியோரில் பல்வேறு வர்க்கம், பல்வேறு வகை, பல்வேறு சமுதாய மக்களைச் சார்ந்த, கலப்பற்ற அஹ்மதிகளின் ஈமானுக்கு வலுவூட்டும் பொருள் தியாகத்தின் சம்பவங்களை எடுத்துரைத்தார்கள். இந்த வகையில், ஹுஸூர் அவர்கள் இந்தியாவின் கேரளா மாநிலம் கருளாயி ஜமாஅத்தைச் சார்ந்த வசதி படைத்த ஒரு நண்பரைக் குறித்து கூறினார்கள்:* அவர் தஹ்ரீக்கே ஜதீத் சந்தாவை செலுத்துவதில் அசாதாரணமான உத்வேகமும் கொண்டிருந்தார். ஒவ்வோர் ஆண்டும் ஒரு பெரும் தொகையை சந்தாவாக கொடுத்து வந்தார். இவ்வருடம் கொரோனாவின் சாதகமற்ற சூழ்நிலை இருந்த போதிலும் 10 இலட்சத்திற்கு பதிலாக ஏறக்குறைய 18 இயல்சம் ரூபாயை தஹ்ரீக்கே ஜதீத் சந்தாவாக கொடுத்துள்ளார். இதுமட்டுமின்றி மேற்கொண்டும் பெரும் தொகையைச் சந்தாவாக கொடுக்க வேண்டும் எனவும் உறுதி கொண்டுள்ளார்.

*ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்:* அஹ்மதிகளுள் செல்வம் படைத்தவர்களிலும் கூட தியாகத்திற்கான ஆர்வம் கொண்டுள்ள இவ்வாறான சாரார் இருப்பது அல்லாஹ்வின் அருளாகும். அவர்களுக்கு வருமானம் வரும்போது அதை அவர்கள் மறைப்பதில்லை. மாறாக அல்லாஹ்வின் வழியில் செலவழிக்க முயற்சிக்கின்றனர்.

பிறகு கினி கொனாக்ரியில் - போக்கே எனும் ரீஜன் உள்ளது. அங்குள்ள ஒரு கிராமத்தின் மிஷனரி கூறுகிறார்: ஜிப்ரீல் சாஹிப் என்ற ஒரு கலப்பற்ற அஹ்மதி நண்பர் ஒருவர் உள்ளார். தொழிலைப் பொறுத்தவரை அவர் தச்சர் ஆவார். சந்தா செலுத்துவது தொடர்பாக அவருக்கு கவனமூட்டியபோது, இன்றைய செலவுக்காக 20 ஆயிரம் ஃபிரான்க் (Franc) வைத்திருந்தேன். அவை அனைத்தையும் நான் சந்தாவாக கொடுத்து விடுகிறேன். இப்போது இதைத்தவிர எங்களிடத்தில் வேறு ஒன்றும் இல்லை. அல்லாஹ் எங்களுடைய தியாகத்தை ஏற்றுக் கொள்வானாக என்று துஆ செய்கிறேன் என்று அவர் கூறினார். கடந்த 3 மாதங்களாக விற்பதற்காக ஒரு மரக்கட்டிலை செய்து வைத்துள்ளதாகவும் அதை வாங்க யாரும் வரவில்லை என்றும் ஜிப்ரீல் சாஹிப் கூறினார். சந்தா கொடுத்த சிறிது நேரத்திலேயே ஒருவர் அந்தக் கட்டிலை வாங்குவதற்காக வந்தார். ஒரு மில்லியன் 5 இலட்சம் ஃபிரான்க்குக்கு அந்தக் கட்டிலை அவர் வாங்கிவிட்டார். அதைக் கண்ட ஜிப்ரீல் சாஹிப் உடனடியாக நம்முடைய மிஷனரிக்கு போன் செய்து, அல்லாஹ் எங்களுடைய தியாகத்தை ஏற்றுக்கொண்டது மட்டுமின்றி பலமடங்கு அதிகமாக அவன் எங்களுக்கு திருப்பி தந்து விட்டான் என்று

கூறினார்கள். ஜிப்ரீல் சாஹிப் அவர்கள் தமது நண்பர்களின் ஈமானும் வலுப்பெறுவதற்காக அவர்களுக்கும் இவ்விஷயத்தை எடுத்துக் கூறி வருகிறார்கள்.

குழந்தைகள் செய்த தியாகத்தினுடைய வினோதமான ஒரு காட்சியை பாருங்கள்! இதைக் குறித்து தன்ஸானியா - சமோயே உடைய முஅல்லிம் எழுதுகிறார்கள்: நான்காம் வகுப்பு படிக்கும் மூன்று பிள்ளைகள் ஜமாஅத்தில் உள்ளனர். அவர்கள் தஃலீம், தர்பிய்யத் வகுப்புகளுக்கு தொடர்ச்சியாக பள்ளிவாசலுக்கு வந்து கலந்து கொள்வார்கள். மூன்று குழந்தைகளுடைய வீட்டினரும் பொருளாதார ரீதியாக ஏழைகளாக உள்ளனர். நிலையான வருமானத்திற்கான எந்த வழிவகையும் கிடையாது. கடந்த மாதத்திலிருந்து இக்குழந்தைகள் தங்களுக்குள் போட்டி வைத்துக்கொண்டனர். தஹ்ரீக்கே ஜதீத் சந்தா செலுத்துவதைக் குறித்து அவர்களுடைய போட்டி இருந்தது. ஒவ்வொருவரும் தனித்தனியாக தனது சந்தாவை கொண்டு வந்து கொடுப்பார். தம்மிடத்தில் இருக்கின்ற அனைத்து தொகையையும் கொடுக்க வேண்டும் என்று முயற்சி செய்வார்கள். இவ்வாறு அவர்களில் ஒரு சிறுவன் 500 Shilling கொடுத்தால் இன்னொருவர் 400, இன்னொருவர் 700 என்று அவர்களிடம் உள்ளதையெல்லாம் கொடுத்து வந்தார்கள். ஒருமுறை நான் அவர்களிடத்தில், நீங்கள் தஹ்ரீக்கே ஜதீத் சந்தா கொடுப்பதற்காக எங்கிருந்து பணம் கொண்டு வருகிறீர்கள் என்று கேட்டேன். அதில் ஒரு சிறுவன், தன்னுடைய தாயாருடன் காட்டுக்குச் சென்று விறகு வெட்டுவதில் உதவி செய்வதற்காகத் தனக்கு பாக்கெட் மணியாக கிடைக்கின்ற பணத்தை தஹ்ரீக்கே ஜதீத் சந்தா கொடுப்பதற்காக வைத்துக் கொள்வதாகவும், தாம் சந்தா கொடுக்க ஆரம்பித்ததிலிருந்து விறகு வாங்கக்கூடிய வாடிக்கையாளர்கள் தமக்கு உடனடியாக கிடைத்து விடுகிறார்கள்; ஒருபோதும் எங்களுக்கு நஷ்டம் ஏற்பட்டது கிடையாது என்றும் கூறினான். இரண்டாவது சிறுவன் கூறியதென்னவென்றால், அந்த சிறுவனும் தனது பாக்கெட் மணியிலிருந்து சந்தாவுக்கென்றே தனியாக பிரித்து வைப்பதாகக் கூறினான். மூன்றாவது சிறுவன் கூறியதென்னவென்றால், அவனுடைய வீட்டுக்கு அருகில் இருக்கக் கூடிய மரங்களில் பழங்கள் காய்க்கின்றன. அவன் தனது உணவுக்கான பழங்களை மிச்சப்படுத்தி அதை விற்று அதிலிருந்து கிடைக்கக்கூடிய தொகையை சந்தாவாக செலுத்துவதாகக் கூறினான். சந்தா செலுத்துவதால் தம்முடைய வாழ்வில் எவ்வாறான நிம்மதி கிடைக்கின்றது என்று எடுத்துரைத்தவாறு அந்த மூன்று சிறுவர்களும் சந்தாக்களின் அருள்கள் குறித்தும் எடுத்துக் கூறினர். அல்லாஹ் இந்த சிறுவர்களின் ஈமானிலும், கலப்பற்ற தன்மையிலும் அபிவிருத்தியை வழங்குவானாக! இதுதான் ஈமான் ஆகும்; இதிலிருந்து நம்முடைய குழந்தைகளும் இன்பம் பெறுகின்றனர்.

மக்களிடையே உருவாகும் புரட்சி இதுவேயாகும்! இஸ்லாத்தை பரப்புவதற்காக நம்மில் ஒவ்வொருவருக்கும் தியாகம் செய்யும் நல்வாய்ப்பு அல்லாஹ் வழங்குவானாக! மேலும் நாம் நமது தூய வருமானத்திலிருந்து தியாகம் செய்யக் கூடியவர்களாக இருப்போமாக! அல்லாஹ்விடத்தில் இந்தத் தியாகங்கள் ஏற்றுக் கொள்ளப்படவும் செய்யட்டுமாக! அல்லாஹ் நம்முடன் திருப்தி கொள்வானாக!

**தஹ்ரீக்கே ஜதீத் சந்தாவுடைய 87 ஆம் ஆண்டு நிறைவடைந்தது.** உலகளாவிய அஹ்மதிய்யா ஜமாஅத் இவ்வாண்டில் இந்த பொருளாதார அமைப்பின் மூலமாக 15.3 மில்லியன் பவுண்ட் பொருள் தியாகம் செய்வதற்கான

நல்வாய்ப்பு பெற்றது. இந்த வசூல் கடந்த வருட வசூலை விட 8 இலட்சத்து 42 ஆயிரம் பவுண்ட் அதிகமாகும். *இத்துடன் ஹுஸூர் அவர்கள் தஹ்ரீக்கே ஜதீதுடைய 88 ஆம் ஆண்டு துவங்குவதைக் குறித்து அறிவிப்பும் செய்தார்கள்.*

இவ்வருடம் உலகம் முழுவதிலும் உள்ள ஜமாஅத்துகளில் ஜெர்மனி மிகவும் முன்னணியில் உள்ளது.

*பாக்கிஸ்தானைக் குறித்து எடுத்துரைத்தவாறு ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்:* பாக்கிஸ்தானுடைய பொருளாதார நிலைமை மோசமாக உள்ளது. அது மட்டுமின்றி பொதுவாகவும் அவர்கள் கஷ்டங்களில் சூழப்பட்டுள்ளனர். அவர்கள் தியாகங்களில் முன்னேறக் கூடியவர்கள்தான் (அதில் சந்தேகமில்லை)! அவர்களுக்காக துஆ செய்யுங்கள். அவர்களும் சுதந்திரமாக தமது அனைத்து இஜ்திமாக்களையும், மாநாடுகளையும், பிற நிகழ்ச்சிகளையும் நடத்தும் வகையிலும், பகிரங்கமான முறையில் நாம் அவர்களின் தியாகங்களை வெளிப்படுத்தும் வகையிலும் அல்லாஹ் அவர்களின் துயரங்களை அகற்றுவானாக! தற்போது சில நிர்பந்தங்களின் காரணமாக அவர்களின் தியாகங்களைக் குறித்தும் எடுத்துரைக்க இயலவில்லை.

**இவ்வருடம் உலகம் முழுவதிலும் உள்ள ஜமாஅத்துகளில் ஜெர்மனி முதலிடத்தில் உள்ளது. பிறகு பிரிட்டன், அமெரிக்கா, கனடா, பிறகு மத்திய கிழக்கைச் சார்ந்த ஒரு நாடு, இந்தியா, ஆஸ்திரேலியா, இந்தோனேஷியா, கானா, பிறகு மத்திய கிழக்கைச் சார்ந்த இன்னொரு நாடு.**

சந்தா கொடுப்பவர்களின் எண்ணிக்கையை அதிகமாக்குவதைப் பொறுத்தவரை ஆப்ரிக்க நாடுகளில் நைஜீரியா முதலிடத்தில் உள்ளது. பிறகு கேம்பியா, செனிகால், கானா, தன்ஸானியா, கினி கொனாக்ரி, மலாவி, யுகாண்டா, கினி பிசாவு, காங்கோ கின்ஷாஸா, புர்க்கினோ ஃபாஸோ, காங்கோ பிராஸ்வில்லே.

சந்தா கொடுப்பவர்களின் எண்ணிக்கையை அதிகமாக்குவதைப் பொறுத்தவரை ஆப்ரிக்க நாடுகள் போக ஜெர்மனி, பிரிட்டன், ஹாலந்து, பங்களாதேஷ், மொரிஷியஸ் ஆகிய நாடுகளில் அதிக அளவில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது.

**ஒட்டுமொத்த வசூலைப் பொறுத்தவரை இந்தியாவின் முதல் 10 ஜமாஅத்துகளின் பெயர்கள்: காதியான் முதல் இடத்தில் உள்ளது. பிறகு கோயம்புத்தூர், ஹைதராபாத், கருளாயி, பத்தபிரியம், கொல்கத்தா, பெங்களூரு, கேரங், கோழிக்கோடு, மேலப்பாளையம்.**

தியாகத்தின் அடிப்படையில் **இந்தியாவின் மாநிலங்களில் முதல் 10 மாநிலங்கள்: கேரளா, தமிழ் நாடு, ஜம்மு காஷ்மீர், கர்நாடகா, தெலங்காணா, ஒடிஷா, பஞ்சாப், பெங்கால், தில்லி, இலட்சத்தீவுகள்.**

*அல்லாஹ் இவர்கள் அனைவரின் உயிரிலும் செல்வத்திலும் எல்லையில்லா அருள்களை வழங்குவானாக என்றும், தியாகங்களை ஏற்றுக் கொள்வானாக என்றும் தியாகம் செய்த அனைவருக்காகவும் ஹுஸூர் அவர்கள் துஆ செய்தார்கள்.*

اَلْحَمْدُ لِلّٰہِ نَحْمَدُہٗ وَنَسْتَعِیْنُہٗ وَنَسْتَغْفِرُہٗ وَنُؤْمِنُ بِہٖ وَنَتَوَکَّلُ عَلَیْہِ وَنَعُوْذُ بِاللّٰہِ مِنْ شُرُوْرِ اَنْفُسِنَا وَمِنْ سَیِّئَاتِ اَعْمَالِنَا مَن یَّھْدِہِ اللّٰہُ فَلَا مُضِلَّ لَہٗ

وَمَنْ یُّضْلِلْہُ فَلَا ھَادِیَ لَہٗ وَنَشْھَدُ أَنْ لَّا اِلٰہَ اِلَّا اللّٰہُ وَنَشْھَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُہٗ وَرَسُوْلُہٗ، عِبَادَ اللّٰہِ رحمکم اللّٰہ اِنَّ اللّٰہَ یَأْمُرُ بِالْعَدْلِ وَالْاِحْسَانِ وَاِیْتَآءِ

ذِی الْقُرْبٰی وَیَنْھٰی عَنِ الْفَحْشَآءِ وَالْمُنْکَرِ وَالْبَغْیِ یَعِظُکُمْ لَعَلَّکُمْ تَذَکَّرُوْنَ اُذْکُرُوا اللّٰہَ یَذْکُرْکُمْ وَادْعُوْہُ یَسْتَجِبْ لَکُمْ وَلَذِکْرُ اللّٰہِ اَکْبَرُ۔

**(தமிழாக்கம்: மவ்லவி A.P.A. தாரிக் அஹமது)**